**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.202/2013** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.8 | |
| Name: | மாணிக்கம், உதவி ஆய்வாளர் ஓய்வு | Caste |
| Father's Name | உடையப்பன் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 68 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20.10.2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் உதவி ஆய்வாளராக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 21.07.2013 ந்தேதி 18.00 மணியளவில் நாகுடி காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது அறந்தாங்கி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சிகிச்சையில் இருந்த வள்ளி க/பெ சாத்தையா என்பவரின் புகார் வாக்குமூலத்தினை பெற்று நிலையம் வந்து குற்ற எண்.88/2013 பதிவு செய்து விசாரணை செய்து இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 355, 506(ii), 379 np ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி இவ்வழக்கில் சம்பவ இடம் சாட்சிகள் மாங்குடி, சாத்தையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது தயார் செய்யப்பட்டது. **மேற்படி பார்வை மகஜர் ஆனது அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2) எதிரிகளை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யததும் எதிரிகளை தேடி வந்த நிலையில் மாண்புமிகு புதுக்கோட்டை முதன்மை நீதிமன்றத்தில் முன்பிணையம் பெற்று இன்னால்வரை பிணையில் இருந்து வருகிறார்கள். வழக்கின் சம்பவ இடத்தினை பார்வையிட்டு சம்பவ சாட்சிகளான வள்ளி, ஜானகி, நாகராஜன், ரவி, சாத்தையா, காளியப்பன், செம்பையா, லெட்சுமணன், கல்யாணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலமானது பதிவு செய்தேன். பின்னர் காயம் பட்ட நபர்க்கு சிகிச்சை அளித்த அறந்தாங்கி அரசு மருத்துவரான திரு.புனிதகுமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலமானது பதிவு செய்தேன். **மேற்படி வள்ளி விபத்து பதிவேடானது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஜானகி விபத்து பதிவேடானது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வள்ளி காயச்சான்றானது அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஜானகி காயச்சான்றானது அ.சா.ஆ.8**

**ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3) பின்னர் இவ்வழக்கின் விசாரணையினை முடித்து குற்றத்தன்மைக்கேற்ப சட்டப்பிரிவுகள் இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 355, 506(ii), 379 np என்பதனை இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 354, 355, 506(ii) என மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் விசாரணையினை முடித்து எதிரிகள்மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 354, 355, 506(ii) கீழ் 26.07.2013 அன்று இறுதி அறிக்கையானது தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

4) நாகராஜன், புகார்தாரர் வள்ளி, ஜானகி ஆகியோர்கள் பெயரில் எதிரிகள் புகார் அளித்து குற்ற எண்.87/2013 ஆனது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வழக்கிலும் நான்தான் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். STC 475/2017 ஆக பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். புகார் அடிப்படையில் எதிரிகள் மீது முதல் தகவல்அறிக்கையினை முதாலவதாக பதிவு செய்தேன் என்றால் இல்லை. அரசு மருத்துவனையிலிருந்து தகவல் வந்ததன் அடிப்படையில் பதிவு செய்தேன். சம்பவ நேரம் பகல் 12.00 மணி என புகாரில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றது மதியம் 01.00 மணி என மருத்துவரிடம் விபத்து பதிவேட்டில் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். ப.சா.2 ம் சம்பவ நேரம் 01.00 மணி என கூறியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் தெரிந்த 5 நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் கூறி சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால் சரிதான். ப.சா.2 தன்னை 4 நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் கூறி சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால் சரிதான்.

5) மருத்துவரிடம் அருவாளால் தாக்கியதாக விளக்கமாறால் அடித்ததாக கூறி சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தடய பொருட்கள் ஏதும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகாரில் ஜாக்கெட்டினை கிழித்தாக மானபங்கம் படுத்தியாக கூறியுள்ளதில் கிழிந்த ஜாக்கெட்டினை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். முன்னுக்குபின் முரணாக மருத்துவரிடமும் புகாரில் கூறியுள்ளதை முறையாக விசாரணை செய்திருந்தால் எதிரிகள் குற்றமற்றவர்கள் என்பது எனது விசாரணையில் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. 2 3/4 மணிநேரம் கழித்துதான் மருத்துவமனை சென்றுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்னவிதத்தில் குற்றச்சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், குற்றசம்பவங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யான தகவல்களை கூறி தங்களுடைய வழக்குகளிலிருந்து தப்பித்து கொள்வதற்காக புகார்தாரர் அளித்த புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.